**சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் - 2019**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர, மன்றத்தின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன உண்மையான மற்றும் நியாயமான விதத்தில் இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது இந்த அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். முகாமைத்துவம் நிதியத்தைக் கணக்கொழிப்பதற்குக் கருதினால் அல்லது மாற்றீடு இல்லாவிடின் செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலே தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் குறித்த விடயங்களை வெளிப்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயற்பாடு தொடர்பான பொறுப்பு அவ்வாளுகைக்குட்பட்ட தொடர்புடைய தரப்பினரால் மேற்கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலநேரத்திலான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க

கூடிய வகையில் தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் அவசியமாகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலாக இருந்தபோதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் தாக்கமளிப்பதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதாரத் தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக ஏற்படக்கூடிய தாக்கங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமாக புரிந்து கொண்ட போதும், உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மை தொடர்பாக அபிப்பிராயத்தை வெளியிடக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் சரியான தன்மையினையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினதும் நியாயபூர்வத் தன்மையை மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவனம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமை, நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்டுள்ளனவா என்பதும் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணப்படுகின்றதா என்பதும்,

- மன்றத்தின் ஆளுநர் சபையால் வழங்கப்பட்ட ஏதாவதொரு எழுத்துமூலச் சட்டம் அல்லது ஏனைய பொது அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை மாத்திரம் அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறையல்லா சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தால் ரூபா 18,290,062 கிரயமான 18 நிலையான சொத்து வகைகள் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. அதற்கமைய ஏற்பட்ட மதிப்பீட்டு வழுவானது இலங்கை பொதுத்துறைக் | 2023 ஆம் ஆண்டின் போது அனைத்து சொத்துக்களையும் மீள்மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுகின்றமை. | முழுமையாக தேய்விடப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவாறு உள்ள சொத்துக்கள் தொடர்பில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணக்கீட்டு நியம இலக்கம் 3 இன் பிரகாரம் மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) கொட்டகல பிரஜாசக்தி அலுவலகத்தின் துறை இணைப்பு பணிகள் தொடர்பில் இரு உத்தியோகத்தர்களுக்கு எதிராக காணப்படும் வழக்கு தொடர்பிலான தகவல்கள் மற்றும் 2016 யூன் 29 ஆந் திகதிய அமப/16/1095/739/004 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் சௌமியமூர்த்தி தொண்டமான் மன்றத்தின் நிரந்தரப் பதவியணி உள்ளடங்களாக மன்றத்தின் கீழ் உள்ள அனைத்து செயற்திட்டங்களும், அவற்றின் அசையும் மற்றும் அசையாத ஆதனங்கள், பணிகள் மற்றும் ஈட்டப்படும் அனைத்து வருமானங்களும் உரிய வரிசை அமைச்சருக்கு ஒப்படைத்தல் தொடர்பில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3 இன் 44 ஆம் பந்திக்கமைய நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டு முதல் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காணி மற்றும் கட்டிடங்களின் கிரயம் தனித்தனியாக கணக்குகளில் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராத காரணத்தால், கட்டிடங்களுக்கான பெறுமானத்தேய்வு ஒதுக்கம் மேற்கொள்ளும் போது ரூபா 277,679,780 கூட்டுத்தொகையான காணிகள் மற்றும் கட்டிடங்களின் மொத்தக் கிரயத்தில் 50 சதவீதத்தின் அடிப்படையில் 2 சதவீத பெறுமானத் தேய்விடல் நிறுவனத்தின் பெறுமானத்தேய்வுக் கொள்கையாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2005 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலும் மொத்தக் கிரயத்தின் பெறுமதியின் அடிப்படையில் | மீள்மதிப்பீட்டு பணிகள் 2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்பது. | திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. |

ரூபா 77,388,249 கூட்டுத்தொகை பெறுமானத் தேய்வு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த காரணத்தால் திரண்ட பற்றாக்குறை ரூபா 35,925,236 மற்றும் ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,776,798 இனால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டின் போது வரிசை அமைச்சிற்கு மன்றத்தின் பணிகளை பொறுப்பேற்ற பின்னர், மன்றத்தினால் சுயதொழில் வாய்ப்புகளுக்காக 2016 ஆம் ஆண்டுக்கு முன்னர் வெளிவாரித் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 562,996 ஆன கடன் மீதியை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் திட்டவட்டமான தீர்மானமொன்றை எடுத்து பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்பது. | கடன் அறவீடுகள் முறைமைப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியினுள் மன்றத்தின் விழா முற்பணங்கள் மற்றும் ஏனைய கடன்களாக ரூபா 1,536,529 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன், ஊழிய சம்பளங்களை செலுத்தும் போது ஊழியர்களிடமிருந்து அந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காது ஏனைய நடைமுறைச் சொத்துக்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இற்கு உரிய கொட்டகலயில் அமைந்துள்ள கட்டிடமொன்றில் பிரஜா சக்தி செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட காலப்பகுதியினுள் மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு பணிகளுக்காக செலவிடப்பட்ட பணத்தை அறவீடு செய்யுமாறு 2012 நவம்பர் 07 ஆந் திகதி இடம்பெற்ற கோப் குழுக் கூட்டத்தில் பரிந்துரை | இந்த அறவீடுகளுக்காக 2022.08.16 மற்றும் 2022.12.06 ஆந் திகதிகளில் நினைவுறுத்தற் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்த போதிலும், பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது. | அறவீடு செய்ய உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 2,457,239 ஆன தொகையை தொடர்ந்தும் மன்றத்திற்கு அறவீடு செய்யத் தவறியிருந்தது. | | |
| (ஈ) | 06 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 14,760,076 கூட்டுப் பெறுமதியான முற்பணங்கள் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவீடு செய்ய தவறியிருந்தது. | தீர்ப்பனவு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | தீர்ப்பனவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

## 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 பெப்ரவரி முதல் யூலை மாதம் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 4,205,283 கூட்டுத்தொகையான ஊழியர் சேம நிதியத்தின் பங்களிப்பினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காது 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செலுத்த வேண்டிய கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் நிதியேற்பாடுகளிலிருந்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அத்தியாவசிய செலவினங்களுக்காக நிதியேற்பாடுகளை பெற்று ஊழியர் சேம நிதியத்தின் பங்களிப்பினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மன்றத்தின் கீழ் காணப்பட்ட கொழும்பு கிளையின் மற்றும் 04 செயற்திட்டங்கள் நீண்ட காலத்தினுள் செலுத்த வேண்டியதாக காணப்பட்ட ரூபா 605,313 கூட்டுப் பெறுமதியான மின்சாரப் பட்டியல்கள், தொலைபேசி பட்டியல்கள் மற்றும் நீர் கட்டணம் ஆகியவை 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பட்டியல்கள் வரிசை அமைச்சின் மூலம் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளமை. | செலுத்தி முடிக்கப்பட்டுள்ள கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 03 நிர்மாண செயற்திட்டங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 3,497,910 கூட்டுத்தொகை 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக உரிய ஒப்பந்த நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கட்டுமானத்தை முடிக்க நிதி இல்லாததால் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய மதிப்புகளை ஈடுகட்ட முடியுமா எனும் | நிலுவைத் தொகையை உடனடியாக வழங்க முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தீர்மானத்தை பணிப்பாளர் சபையின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது. | |
| (ஈ) | மீளாய்வாண்டின் செலுத்த வேண்டிய கணக்குகளின் கீழ் 15 நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 8,445,582 கூட்டுப் பெறுமதி 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த செலுத்த வேண்டிய பெறுமதிகள் குறிப்பிடப்பட்டுள்ள பெரும்பாலானவை தற்போது செயற்பாட்டு நிலையில் காணப்படாததுடன், அது தொடர்பில் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | தீர்ப்பனவு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 25 குறுங்கால கடன் கொடுத்தோருக்கு செலுத்த வேண்டிய ரூபா 88,184,387 கூட்டுப் பெறுமதி காணப்பட்டதுடன், அந்த பெறுமதியினுள் 05 வருடங்களை விஞ்சிய கடன் கொடுத்தோர் பெறுமதி ரூபா 85,331,368 ஆகும். | இற்றிலிருந்து சுமார் 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கடன் கொடுத்தோரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிராததுடன், மீதி உறுதிப்படுத்தல்களுக்காகவும் எதுவித பதிலும் வழங்கப்படவில்லை. பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | தீர்ப்பனவு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (i) | 134(3) ஆம் பிரிவு | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேுண்டிய போதிலும், மன்றம் அதற்கமைய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது. |
| (ii) | 371(2)(இ) ஆம் பிரிவு | உப கட்டுநிதிகள், அது வழங்கப்பட்ட பணி நிறைவடைந்ததும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்காமையால் ரூபா 1,004,937 ஆன முற்பணம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த கட்டுநிதிகளை பெற்ற ஊழியர்கள் தற்போது நிறுவனத்தில் பணியாற்றாததுடன், கூடிய கூடியளவு விரைவில் இதனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | தீர்ப்பனவு செய்வதற்கு முறையான வேலைத்திட்டமொன்று ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 756 மற்றும் 757(2)(ஆ) | மன்றத்தினால் பொருள் மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள, பொருள் மெய்மையாய்வு அறிக்கைள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொருள் மெய்மையாய்வு அறிக்கைள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/1 2ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | நிதியாண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மன்றத்தினால் 2019 ஆம் ஆண்டுக்குரிய நிதிக்கூற்றுக்கள் 2022 செப்தம்பர் 15 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டு முதல் உரிய காலத்தில் நிதிக்கூற்றுக்களை சமர்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய உரிய காலத்தில் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2019 சனவரி 12 ஆந் திகதிய DMA/01-2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 5.3 ஆம் பிரிவு | முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் ஆகக் குறைந்தது வருடமொன்றுக்கு 4 தடவைகள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், ஆண்டினுள் எதுவித கூட்டத்தினையும் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டு முதல் முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. | மன்றத்திற்காக குழுக்களை அமைத்து கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்களை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 5,303,653 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் பற்றாக்குறை ரூபா 8,947,960 ஆகும். அதற்கமை, நிதிப் பெறுபேறுகளில் ரூபா 3,644,307 ஆன அதிகரிப்பொன்றினை காண்பிப்பதுடன், கடந்த வருடத்தினை விட பெறுமானத் தேய்வுப் பெறுமதி குறைவடைந்தமை அதற்கு தாக்கமளித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொட்டகல பிரஜா சக்தி அலுவலகத்தில் 2011 ஆம் ஆண்டின் ஏப்ரல் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 4,252,500 தொகையான துறை இணைப்பு படியானது தற்போது சேவையில் இல்லாத இரு செயற்திட்ட முகாமையாளர்களின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகளுக்கு செலவு வைப்பதற்கு 2013 யூலை 24 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட விசேட புலனாய்வொன்றில் வெளிப்படுத்தப்படுத்தப்பட்ட பின்னர் ரூபா 1,050,000 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன், தொடர்ந்தும் ரூபா 3,702,500 அறவிட முடியாதிருந்தது. | இதற்காக ஹட்டன் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன், இந்த இரு உத்தியோகத்தர்களும் மன்றத்திற்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளனர். | புலனாய்வுப் பணிகள் நிறைவடைந்துள்ளமையால், உரிய தரப்பினரிடமிருந்து எஞ்சிய பணத்தையும் தாமதிக்காது அறவிடப்பட வேண்டும் என்பது. |

**3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரம்பொட கலாச்சார | கெப் வண்டியொன்று ஒரு | இது தொடர்பில் சரியான |

| | | | |
|---|---|---|---|
| | நிலையத்திற்காக நிதிக் குத்தகை முறைமையின் கீழ் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 5,840,000 ஆன தொகைக்கு கெப் வண்டியொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2015 பெப்ரவரி மாதம் முதல் தவணைப் பணம் செலுத்தப்படாத காரணத்தால் இந்த வாகனம் நிதிக் கம்பனியால் மீண்டும் சுவீகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய செலுத்தப்பட்ட ரூபா 1,565,504 தொகை மன்றத்திற்கு நட்டமாக இனங்காணப்பட வேண்டிய போதிலும், அது முற்பணமொன்றாக நடைமுறைப் சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் மன்றத்தின் பணிப்பாளர் சபையினால் தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருடத்திற்கு மேற்பட்ட காலமாக மன்றத்தினால் பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்த காலத்திற்கு வாகனமொன்று வாடகைக்கு எடுக்கப்பட்டால் ந்த தொகையை விட அதிக தொகையொன்றை செலுத்த நேரும் என்பதால் நட்டமொன்று ஏற்படவில்லை. | தீர்மானமொன்றை எடுத்து நிதிக்கூற்றுக்கள் திருத்தப்பட வேண்டும். |
| (ஆ) | ரம்பொடை தொன்டமான் நிலையத்தின் நிர்மாணப் பணிகளுக்காக மன்றத்தினால் 2010 ஆம் ஆண்டின் போது பணி முற்பணங்களாக வழங்கப்பட்டிருந்த ரூபா 7,544,265 தொகை மீளாய்வாண்டு வரையிலும் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, அந்த நிர்மாணங்கள் 2013 செப்தம்பர் மாதத்தில் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வு திகதியான 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிராத காரணத்தால் ரூபா 25,678,995 தொகை நடைமுறை வேலையாக குறிப்பிடப்பட்டிருந்தது. | இரு நிறுவனங்களுக்காக இதுவரையிலும் ரூபா 3.5 அண்மிய கொடுப்பனவொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சிய பெறுமதியை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவு செய்ய போதுமான நிதியேற்பாடு காணப்படவில்லை. இந்த இரு நிறுவனங்கள் தொடர்பில் சட்ட ஆலோசனை பெற்று அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படும். | நிர்மாணப் பணிகளை நிறைவு செய்து கொடுப்பனவுகளை முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |